அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறார்கள். ஆனால் உலகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலேயிருந்து பறவைகள் எந்தவித கட்டுப்பாடும் இல்லாது அந்தப் பகுதியில் வருவதற்கும், அங்கே தங்கியிருக்கவும், உல்லாசமாக இருக்கவும், அது தவிர அவை மீண்டும் 2, 3 மாதங்கள் இருந்த பின்னர், பறந்து செல்லவும் இருக்கிற ஒரு அற்புதமான பறவைகள் சரணாலயமாக அந்தப் பகுதி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 55, திரு. டி. வேலையா, திரு. ப. கலியபெருமாள், திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு கல்வியமைச்சர்.

55—

தொழில்கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஆசிரியர்களை நிரந்தரமாக்குதல்

*9690—திரு. டி. வேலையா,
திரு. ப. கலியபெருமாள்,
திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகளில் ஒப்பந்த அடிப்படையில் எத்தனை ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள்?

(ஆ) இவர்களை முன்னுரிமை அடிப்படையில் நிரந்தர ஆசிரியர்களாக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆளுமைக்குட்பட்ட அரசினர் தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் சிறப்புப் பயிலகங்களில் ஒப்பந்த அடிப்படையில் 82 பேர் போதகர்களாக பணிபுரிகிறார்கள்.

(ஆ) அவர்களது பணியை போதகர் நிலையில் 'இன்ஸ்ட்ரக்டர் கேடர்' வரன்முறைப்படுத்த அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்திருக்கிறது. அவர்கள் அனைவருக்கும் நேர்காணல் தேர்வு நடத்தி, அவர்கள் பெறும் மதிப்பெண் மற்றும் இட ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் பெயர்களை

1993 அக்டோபர் 28]

வரிசைப்படுத்திபட்டியல்வெளியிடுமாறு ஆசிரியர் தேர்வு வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி ஆசிரியர் தேர்வு வாரியம் தேர்வு நடத்தி, தேர்ச்சிப் பட்டியலை அனுப்பியுள்ளது. வரன் முறை செய்வது குறித்து நடவடிக்கை தொடரப்பட்டு வருகின்றது. பொறியியற் கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுபவர்கள் தொடர்பான சில கூடுதல் விவரங்கள் கோரப்பட்டுள்ளன. அந்த விவரங்கள் கிடைக்கப்பெற்றவுடன் இவர்களது பணி வரன்முறை குறித்து அரசு தனியே பரிசீலிக்கும்.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களை பணியில் சேர்த்துக்கொள்கின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே தகுதியின் அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக இவர்கள் பணியாற்றி வருகிறார்கள். 10 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வருகிறவர்களுக்கு புதிதாக தகுதி இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்ப்பது என்பதில் சில முரண்பாடு தோன்றுகிறது. ஆகவே அவர்களிடையே ஒரு சோர்வும், விரக்தியும் ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையிலே, இத்தனை ஆண்டுகளாக பணியாற்றியதற்காக முன்னுரிமை கொடுத்து, அவர்களை உடனடியாகப் பணியிலே நிரந்தரமாக சேர்த்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினர் தொழிற்நுட்பப் பயிலகங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்ற 82 போதகர்கள் பணியை நிரந்தரப்படுத்துமாறு அவ்வாசிரியர்கள் சில காலமாக முறையிட்டு வந்தார்கள். அவர்களின் நீண்ட நாள் பணி, பிற துறைகளிலுள்ள ஒப்பந்த ஆசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்திய விதம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக சிறப்புத் தேர்வு அல்லது நேர்காணல் நடத்தி, தேர்வு செய்து, அவர்களது பணியை முதற்கண் போதகர்கள் நிலையில் வரன்முறை செய்யலாம் என்று அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்தது. இது தொடர்பாக தேர்வு ஆணையம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர்களுள் உயர்நிலை தகுதி பெற்றவர்களில் பி.ஈ. பர்ஸ்ட் கிளாஸ், 55 பர்செண்ட் இன் பி.ஜி. நேர்காணல் நடத்தி, ஏனையோருக்கு தேர்வு செய்யுமாறும், தேர்வு ஆணையத்திற்கு தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் கல்லூரிக் கல்வித்துறையிலுள்ள ஒப்பந்த அடிப்படை விரிவுரையாளர்கள் அனைவரையும் தேர்வு ஆணையத் தேர்வில் பெற்றுள்ள மதிப்பீட்டின் அடிப்படையில் பணி மூப்பு அளவிலும், இட ஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றியும் நிரந்தரமாக நியமிக்கலாம். எனவே தொழில்நுட்பப் பயிலகங்களிலும் இதனைப் பின்பற்றலாம் எனவும்

அரசு முடிவு எடுத்தது. மேற்கண்ட 82 பேரில்—84 பேரில் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறையின் ஆளுகைக்கு உட்பட்ட கல்வி நிறுவனங்களில் உள்ள இருவரைத் தவிர இதர 81 பேர்களுக்கு மட்டுமே தேர்வு நடத்த இயலும் என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கு இடையில் சிறப்புத் தேர்வு, நேர்காணல் என்று இல்லாமல் அனைவருக்கும் நேர்வுகாணல் நடத்துமாறு ஆசிரியர் தேர்வு ஆணையம் செய்திருந்த பரிந்துரைகளையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவ்விதம் தேர்வு நடத்தி தேர்ச்சி பட்டியலையும் தேர்வு ஆணையம் தற்போது அனுப்பி உள்ளது. அதன் மீது இயக்ககத்தின் கருத்துரு பெற்று இவ்வாசிரியர்களின் பணி வரன்முறை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11—10

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக்குகளிலே ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகின்ற அனைவரும் எப்போது நாம் பணிநீக்கம் செய்யப்படுவோம் என்ற அச்சத்தோடு அவர்கள் பல ஆண்டுக்காலமாக அந்தக் கல்லூரிகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் தற்போது அதை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று கூறி உள்ளார்கள். அவர்களுக்கு விரைவிலே ஒப்பந்த அடிப்படையிலே இருக்கிற அந்த ஆசிரியர்களை எல்லாம் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்து அவர்களை நிரந்தரப் பணியில் அமர்த்த விரைவிலே நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சந்தேகப்படத் தேவையில்லை. அரசு அதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறது. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரகத்திலேயிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டவுடன் உடனடியாக பணி வரன்முறை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை கடந்த ஆட்சிக் காலத்தில் தான் ஏற்படுத்தப்பட்டது. ஆசிரியர்களின் ஊதியம் அவர்கள் செய்யும் வேலையின் அடிப்படையில்தான் தர வேண்டுமே தவிர வேறு அல்ல. அரசியல் சட்டத்தின் சாரம் அதுதான். 'Equal pay for equal work' என்ற சட்டத்திற்கு புறம்பாக ஒரே ஊழியம் செய்கின்ற அவர்களுக்கு இரு வேறு ஊதியம் அளிப்பது முறையானதல்ல. **கன்சாலிடேட்டட்**

1993 அக்டோபர் 28]

சம்பளம் அளிக்க அரசுக்கு அரசியல் சட்டம் அதிகாரம் அளித்துள்ளதா? கான்டிராக்ட் ஆசிரியர்களை உடனடியாக முழுமையான ஊழியர்களாக ஆக்கிட அரசு முன்வருமா? இந்த கான்டிராக்ட் ஆசிரியர்கள் ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் பணியில் நியமிக்கப்படுகிறார்கள். அந்த எஜுகேஷனல் இயர் முடிந்த உடன் ஊஸ்ட் செய்து அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். பிறகு மீண்டும் அவர்கள் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். இப்படி டெம்பரரியாகவே அவர்கள் தொடர்ந்து பணியில் அமர்த்தப்படுகிறார்கள். ஆகவே அவர்களை ஊஸ்ட் செய்யாமல் நிரந்தரமாகவே பணியில் அமர்த்துவதற்கு வகை செய்யும் வகையில், எங்கும் புரட்சி எதிலும் புரட்சி இங்கேயும் புரட்சி செய்கிற புரட்சித் தலைவியினுடைய (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி காலத்தில் இந்தப் புரட்சியையும் அவர்கள் செய்ய வேண்டும் என்று பணிவோடு வேண்டி அரசு அதை ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே நிகழ்ந்து விட்ட தவறுகளை திருத்துவதற்காகவே ஆட்சி பொறுப்பை ஏற்றிருக்கிற மாண்புமிகு புரட்சி தலைவியினுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக அது நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்வதோடு, இதற்கான கருத்துரு கோரப்பட்டுள்ளது, அது கிடைத்த உடன் அதன் அடிப்படையில் பணி வரன்முறை செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு தற்போது இந்த அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்கு பின்பு ஒப்பந்த அடிப்படையில் யாரும் நியமிக்கப்படுவது இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க இருந்த கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலிலேயே பதில் சொல்லிவிட்டார்கள். ஏனென்றால் நாம் அவர்களை முதலிலே ஒப்பந்த அடிப்படையிலே நியமிக்கின்றோம். பின்னால் அவர்கள் அதை வரன் முறைப்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறபோது முன்னால் இருந்த பணிக்காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, வரன் முறைப்படுத்துகின்றோம். இது ஒரு பெரிய சிக்கலான பிரச்சினையாக கல்வித் துறையிலே இருந்துக் கொண்டிருக்கிறது. அதனால் இந்த பாலிசியை கான்டிராக்ட் முறையில் பணி அமர்த்துகின்ற இந்த முறையை நீக்கி அவர்களை பணி நிரந்தரம் என்ற முறையில் பணி அமர்த்தி விட்டால், இந்த சங்கடங்கள்

தீர்ந்து விடும் என்பதால் தான் பல காலமாக கல்வித் துறையிலே இதை பலரும் கோரிக்கையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியிலாவது இந்த முறையை நீக்கினால் நம்முடைய கல்வித் துறையில் இருக்கும் ஆசிரியர் பெருமக்கள் அனைவரும் அவர்களுக்கு நன்றி உடையவர்களாக இருப்பார்கள். ஆகவே அதை உடனடியாக அமல்படுத்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சந்தேகம் தேவையில்லாதது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் கல்வித்துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்கின்ற முறையை அடியோடு கைவிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 56, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

56—

நெருஞ்சிப்பேட்டை அரசு உயர்நிலைப்பள்ளிக்கு தொலைக்காட்சிப்பெட்டி.

*21445—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

பெரியார் மாவட்டம், நெருஞ்சிப்பேட்டை அரசு உயர்நிலைப்பள்ளிக்கு மாணவர்கள் சிறப்பாக கல்வி பயில பாட சம்பந்தமான விவரங்கள் தெரிந்துகொள்ள தொலைக்காட்சிப்பெட்டி ஒன்று வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் தொலைக்காட்சிப் பெட்டி வாங்குவதற்கு ஏற்றவகையில் பொதுவான அரசாணை நடைமுறையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.